செ.வெ.எண்:15 நாள்: 05.10.2019

# பத்திரிக்கை குறிப்பு

கரூர் மாவட்டத்தில் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்களை அமைப்பதைஊக்குவிக்கும் வகையிலும், உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்த ஜவுளிபூங்கா அமைக்கமுன்வரும் தொழில் முனைவோர்களுக்கு 2கோடியே50இலட்சம் ரூபாய் வரைநிதியுதவி, தமிழகஅரசால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து, தகுதிவாய்ந்தமுதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் பயன் அடையுமாறுகரூர் சரககைத்தறிமற்றும் துணிநூல் துறைஉதவி இயக்குநர் திருமதி.வே.விஜயலட்சுமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர்வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு

கரூர் மாவட்டத்தில் சிறிய அளவிலான ஜவுளிப்பூங்காக்களை அமைப்பதற்கு குறைந்தபட்சம் 3 தொழிற்கூடங்களுடன் குறைந்தபட்சமாக 2 ஏக்கர் நிலத்தில் சிறியஅளவிலான ஜவுளிப்பூங்கா (Mini Textile Park) அமைக்கும் திட்டத்தினை உடனடியாக செயலாக்கம் செய்ய ஏதுவாக தகுதி வாய்ந்த முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்தாய்வுக் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் கரூர் மாவட்ட ஆட்சியரக வளாக கூட்டஅரங்கில் 15.10.2019 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் நடைபெற உள்ளது. எனவே முதலீட்டாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் இந்தவாய்ப்பினை பயன்படுத்தி சிறிய துணிநூல் பூங்கா தொடர்பான பிரேரணையுடன் மேற்படி கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு தெரிவித்துள்ளார். மேலும் கூடுதல் விபரங்களுக்கு கரூர் வெங்கமேடு வி.வி.ஜி நகர்,கதவிலக்கம் 121/5-இல் கைத்தறிமற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகத்தினை தொடர்பு கொள்ளவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.